Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 18 Pages 4 Sunday, 22 June 2008 Free Copy

கரைசேரும் வாழ்க்கைப் படகு

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்தில் ஒந்தாச்சிமடம் பிரதேசம் அமைந்துள்ளது. இங்கு பெண்களை மையமாகக்கொண்டு படகு கட்டும் நிறுவனமான ஸ்ரீலங்கா சொலிடாரிட்டி நிறுவனம் இயங்கிவருகின்றது.

ஸ்ரீலங்கா சொலிடாரிட்டிநிறுவனத்தில் படகு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் உதயவாணி

இங்குள்ள படகு கட்டும் தொழிற்சாலையில் கடந்த ஒருவருடமாக கடமையுரிந்து வரும் உதயவாணி கூறுகையில், 'இதன் மூலம் நிறைய அனுபவம் பெற்றேன். தொழிலுக்கு வரும் முதல் நிறைய கஷ்டப்பட்டிருக்கேன். இந்த வேலைக்கு வந்த பின் தான் இப்போது சந்தோசமாக இருக்கின்றது. எனக்கு ஒரு பயிற்சியும் இல்லை இங்கு வந்த பிறகுதான் படகு செய்யும் முறைகளைப்பற்றி அறிந்துகொண்டேன்' என்றார்.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றே ஸ்ரீலங்கா சொலிடாரிட்டி நிறுவனம். இந்நிறுவனத்தின் உதவியுடனே ஒந்தாச்சிமடத்தில் உள்ள படகு செய்யும் தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

இங்கு பெண்கள் மட்டுமே வேலை செய்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையில்லா பெண்கள் 23,242 பேரும், 40 வயதுக்குட்பட்ட இளம் விதவைகள் 9021 பேரும் காணப்படுகின்றார்கள். பெண்கள் நிறைய துன்பங்களுக்கு உட்படுத்தப்படல், வேலையின்மை, இளம் வயதில் விதவைகளாதல் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நிறுவனத்தை ஆரம்பித்ததாக இதன் கிழக்கு திட்டத்திற்கான இணைப்பாளர் அனில்டட் ஜெயராஜ் குறிப்பிட்டார்.

இந்த பிரதேச மக்கள் எந்த விதமான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இன்றி வாழ்ந்து வந்தனர். அதனால் அந்த வாழ்க்கைக்கு நம்பிக்கையான ஒளியைக் கொடுக்க முடியுமா என்று அவர் யோசித்தார். அதனால் கனாமிக்கு பிறகு இந்தத் திட்டத்தை அவர் ஆரம்பித்தார்.

இந்தத் திட்டத்தை அரச நிறுவனமான சீனோர் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ளனர். இங்கு வேலை செய்யும் பெண்களை கொழும்புக்கு அனுப்பி படகு தயாரிக்கும் முறைப்பற்றி பயிற்சிகள் தற்போது வழங்கப்படுதது.

இங்கு வேலை செய்யும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு 550 ரூபா சம்பளம் வழங்கப்படுவதாக கூறும் உதயவாணி, 'ஆரம்பத்தில் அண்ணா எல்லாம் போக வேண்டாமென்று சொன்னார்கள். நான்தான் போறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். இதனை தொடர்ந்து கொண்டு செல்லவேண்டும் என்றுதான் எல்லோரும் நினைக்கிறோம்' என தனது எதிர்பார்ப்புகளையும் தெரிவித்தார்.

இங்கு தற்போது மூன்று படகுகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை பூரணமாகக் கட்டப்பட்டு முடிந்தவுடன் இலவசமாக மீனவர்களுக்கு வழங்கப்பட வுள்ளதாக இணைப்பாளர் அனில்டட் ஜெயராஜ் குறிப்பிட்டார்.

பெண்களும் இவ்வாறான கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் தமது பொருளாதார சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதையே

> **பெண்களும் கைத்தொழிற் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் தமது பொருளாதார சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதையே ஸ்ரீலங்கா சொலிடாரிட்டி நிறுவனத் தின் இந்த செயற்திட்டம் வெளிப்படுத்துகிறது.**

ஸ்ரீலங்கா சொலிடாரிட்டி நிறுவனத்தின் இந்த செயற்திட்டம் வெளிப்படுத்துகிறது.

நம்பிக்கையோடு முயன்றால் துன்பப் படும் பெண்களின் வாழ்க்கைப் படகும் கரைசேரும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்திலில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும். எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

வெற்றி எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறந்த நாள் உங்கள் திருமண எண்ணங்களையும் உங்கள் பயணப்பதிவுகளையும் எமக்கு எழுதி அனுப்பிவையுங்கள். அவையிலாவு மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க வசதியிருக்கின்றோம்.

தபா.பெ.இல. 1039 கொழும்பு
தொலை: 077 4952242
www.info@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 130ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 73,970குடும்பங்களைச் சேர்ந்த 265,894 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைக்குத் தேவையான பரசிட்மோல் மருந்துகளை எிறி யோசிப்பதற்காக கொண்டுவந்துள்ளதாக மாவட்ட கூகா தார பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

✱ மன்னார் மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் UNHCR நிறுவனமானது இடம்பெயர்ந்த மக்களுக்கும் 36 உள்ளூர் பாடசாலைகளுக்கும் சமயம் உபகரணங்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

✱ மன்னார் மாவட்டத்தில் உலக உணவு திட்டமானது 90 பள்ளிகளில் உணவூட்டல் திட்டத்தினை நடத்தி வரு கிறது. இதன் மூலம் 17,327 மாணவர்கள் பயனடைந்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரிசி விநியோக நட வடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இத்திட்டத் தினை நடைமுறைப்படுத்துவதில் உலக உணவுத் திட்டத்திற்கு இருந்த சிக்கல் நிலையை நிவர்த்தி செய்ய உலக தரிசன நிறுவனமானது 5 மெட்ரிக் தொன் அரிசி யினை வழங்கியுள்ளது.

✱ மட்டக்களப்பு மாவட்டத்தில் IOM நிறுவன மானது வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுப்பதில் போக்கு வரத்துத் தாமதங்களை எதிர்கொண்டுள்ளது. ஆடுகள் மற்றும் 32 கோழிப்பண்ணைகளைப் பெற்றுக் கொள்வதற் கான 58 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன். கோழிப்பண்ணைக்கான கட்டுமானப் பொருட்கள் ஏற்க னவே வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. Vovcod நிறுவனமானது பக மாடுகளை பருத்திச் சேனை கிராமத்திற்கு வழங்கியுள்ளது. 60 பயனாளிகளில் 48 பேருக்கு பக மாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

பேசும் படம்

மன்னாரில் வசிக்கும் ஒரு சிறுமி பள்ளி சென்று திரும்பிய பின் கயிறு தாண்டும் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதையே காண்கின்றீர்கள். சேவ் த சில்ரன் நிறுவன மானது இடம்பெயர்ந்த மற்றும் நிரந்தர வதிவிடங்களில் உள்ள சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி யுள்ளது. இதன் மூலம் சிறுவர்கள் பாட சாலை கற்றல் நடவடிக்கைகளின் பின்னர் விளையாட்டு மற்றும் ஓவியம் வரைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவும், பெற்றோர்கள் சிறுவர்களுடன் இணைந்து அவர்களை உற்சாகமூட்டவும், இருதரப் பினருக்கும் இடையிலான ஒற்றுமையை வளர்க்கவும் முடிகிறது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அரசாங்க சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர் களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: இணையமுகவரி தேடுமாறு கேடுகின்றோம்

வாழ்வின் வர்ணங்கள்

வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக தனது தேவைகளுக்காக வரும் பலரின் விண்னப்பப்படிவங்களை பூர்த்தி செய்துகொண்டிருந்த **சி.கிருஷ்ணசாமி** கண்டியிலி ருந்து 1983ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தற்போது வவுனியா கம்மடு ஈஸ்வரிபுரத்தில் வசித்து வருகின்றார். விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்ய மக்கள் தரும் கூலி மூலமாகவே வாழ்க்கை நடத்தும் இவர் தன்னைப்பற்றி தெரிவிக்கின்றார்.



மாங்குளத்தில் ஒரு சிள்ள கடை ஒன்று ஆரம்பித்து நன் றாக வாழ்ந்தோம். பின்னர் அங்கிருந்து மடுவிற்கு இடம் பெயர்ந்தோம். பின்னர் மடுவி லிருந்து வவுனியா நலன்புரி நிலையைத்திற்கு வந்து 10 வரு டம் அங்கிருந்தோம். தற்போது கம்மடு ஈஸ்வரிபுரம் மீள்குடி யேற்றத் திட்டத்தில் வசித்து வருகின்றோம். இங்கு 8 வருட காலமாக இருந்து பிறப்பு, இறப்பு, வாகனப் பதிவு போன்ற வற்றிற்காள மனுக்களை நிரப்பிக் கொடுக்கும் பணியில் ஈடு படுகின்றேன். ஒரு நாளைக்கு 300 முதல் 500 வரை வருமா னம் வருகிறது. மனுக்களை நிரப்புவதற்கு 30 ரூபாய் அற விட்டோம். ஆரம்பத்தில் பொருட்களின் விலை குறைவாக இருந்தபோது 5 அல்லது 10ரூபாதான் அறவிட்டோம். அதன் பின்னர் பொருட்களின் விலைமேற்றத்தின் பின்னர் நாங்க ளும் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியதாகிவிட்டது. சில நாட்களில் மக்கள் வராவிட்டால் எமக்கு வருமானம் இல்லா மலே போகும்.

சொந்த இடம்தான் எமக்கு சொர்க்கம்

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பூவரசன் தீவு மக்கள் 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்தனர். அந்த மக்களில் அநேகமானோர் தற்போது மீளக்குடியமர்த்தப் பட்டுள்ள துடன் அவர்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டி யெழுப்பியும் வருகின்ற னர். இதேபோல் சொந்த இடத்திற்குச் செல்லாதவர்க ளும் இங்கு வாழந்து வருகின்றனர்.

கிண்ணியா பூவசரசன் தீவில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்கள்

புதன்கிழமை நாளொன் றில் பிற்பகல் 3.30 மணி யளவில் கிண்ணியா பூவர சன் தீவில் வசிக்கும் அதிக மான முஸ்லிம் ஆண்கள் தொழுகைக்காக பள்ளிக்கு வந்தவண்ண மிருந்தனர். இடம்பெயர்ந்து சுமார் 12 வரு டங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் இருக்கும்போது பள்ளிக்கு செல்வதற்கான வாய்ப்பு இவர்களுக்கு கிடைக்கவில்லை.

தற்போதுதான் வழமையான வாழ்க் கைக்கு ஓரளவு திரும்பியுள்ளோம், நாங் கள் வரும்போது வீடு வாசல் எல்லாம் எரிந்து சாம்பலாகி இருந்தது சில அரை குறையாக இருந்தது எல்லா மக்களுக்கும் கவலைதான்' என்று கூறுகின்றார் அங் குள்ள மாஜிதீன்.

இங்குள்ள மக்கள் ஆரம்பத்தில் விவ சாயத்தை அடிப்படை தொழிலாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். இருப்பினும் தற்போது சொந்த இடத்திற்கு திரும்பினா லும் தொழிலை தொடர முடியாமல் இருக் கின்றனர்.

2002 ஆம் ஆண்டு சொந்த இடத்திற்கு திரும்பிய மாஜிதீன் அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு மீளக்கட்டி யெழுப்பிக்கொண்டனர் என்பது தொடர்பாக கூறுகினார். 'நாங்கள் மீளக் கட்டியெழுப்பட்டதற்கு காரணம் சில மக்க ளிடம் வதி இருந்தது அவர்கள் வீடு களை கட்டினார்கள். சிலபேர் வெ நாடு கள் போய் கை கொடுத்து கட்டினார்கள். இன்னமும் கட்டியெழுப்ப முடியாமல் சிலர் குடிசைகளில் வசிக்கின்றனர்'

பூவரசன்தீவில் அந்த பிரதேசத்திற்கு அருகில் உள்ள இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களில் இன்னும் சொந்த இடத்திற்கு செல்லாதவர்களும் வசித்து வருகின்றனர். மகமாரை பிறப்பிடமாகக் கொண்ட சேதுன் ரம்லான் பூவரசன்தீவில் இடம்பெயர்ந்து கடந்த 17 வருடங்களாக வாழ்ந்துவருகிறார். அவர், 'நாங்கள் சொந்த இடத்தில் உழைத்து சாப்பிடுவது போல் வராது. சொந்த இடம்தான் துப்புரவாக இருக்கும், வேறு இடத்தில் இருப்பது மனசுக்கு நிம்மதி இல்லாமல்தான் இருக்கும். அந்நியர் இடத்தில் இருந்து நினைத்தமாதிரி போய் வர முடியாது. எங்களுடைய இடத்தில் இருப்பதைப்போல் வராது. அங்குதான் சுதந்திரம் அதிகம் மீளக்குடியேறுவற்கு அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தால் உடனே சொந்த இடத்திற்கு செல்ல தயாராக இருக்கிறோம் என்றார்.

எங்களுக்கு வசதி வாய்ப்புகள் நீர், கிணறு வசம் சாப்பாடு, வீடு வாசல் எல்லாம் ஒழுங்காக இருந்தால் நாங்கள் அங்குபோய் சென்று வாழுவோம். இப்போது எங்கள் கையில் காசு இல்லை. அரசாங்கம் மீளக்குடியமர்த்துவதற்கு முன்னர் சென்று வாழ எங்களிடம் ஆதாரம் இல்லை.

சேதுன் மம்லானின் கருத்தைப்போன்றே இடம்பெயர்ந்து அகதிமுகாம்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருப்பவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

சாரம்

கொழும்பு வெள்ளவத்தை பீட்டர்சன் மைதானத்திற்கு சென் றோம். கற்றி குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்துள்ள மைதானம் அது. அங்கே கொஞ்சம் இளைஞர் கள் உற்சாகமாக ரக்பி மற்றும் கிரிக் கெட் விளையாடிக் கொண்டிருந்த னர். இவர்களை சந்தித்து பிற இன இளைஞர்களோடு எப்படி சேர்ந்து விளையாடுகின்றனர் என்பது பற்றி கேட்டபோது அவர்கள் கூறிய பதில்கள்.

வாஹிசன,' யாழ்ப்பாணம் - நாங்கள் மூவின மக்களும் சந்தோசமாக விளையாடிகொண்டிருக்கிறோம். எந்த நாளும் மாலை 6 மணியிலிருந்து விளையாடுவோம். நாங்கள் ஒரு சகோதர உணர்வோடு விளையாடுகின்றோம். சிங்களவர்களோடு விடுமுறை நாட்களில் விளையாடுவோம். மொழி பற்றி எங்களுக்கு கவலை இல்லை.

தம்மிக்க வசந்த ?? நான் இந்த மைதானத்தின் பொறுப்பாளர். எல்லோரும் இங்கு வருவார்கள். சுற்றி உள்ள பகுதியிலிருந்து, பாடசாலையிலிருந்து, விளையாட்டு கழகங்களிலிருந்து, கம்பனிகளிலிருந்து வருவார்கள்.'

கொழும்பு வெள்ளவத்தை பீற்றர்சன் விளையாட்டு மைதானம்

யாரும் தனது இனத்தை பற்றி யோசிப்பதில்லை. எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையாக விளையாடி விட்டுப்போவார்கள்.

மொஹமட் சமீர் - சிங்களம், தமிழ், முஸ்லிம் எல்லாம் கலந்துதான் விளையாடுவோம். எல்லாம் சமாதானமாக விளையாடுகிறோம். ஒரு நாளைக்கு 24 மணிநேரமும் விளையாட மாட்டோம். இந்த கொஞ்ச நேரத்தில் சரி சந்தோசமாக இருப்போம் என்று நினைத்துதான் விளையாட வருவோம்.

கசத் அல்வில் - வெள்ளவத்தை யில் இருந்து விளையாட வந்திருக்கிறேன். நான் 25 வருடமாக விளையாடிக் கொண்டிருக் கிறேன். இங்கு இந்த கிராமத்தை சுற்றி இருக்கின்றவர்கள் வருகிறார்கள் சிங்களம் ஒரு வார்த்தை பேச முடியாதவர்கள் கூட விளையாடு கிறார்கள். அவர்கள் எங்களிடம் சிங்களத்தை கற்று கொள்வார்கள். நாங்கள் அவர்களிடம் தமிழைப் படித்துக் கொள்வோம்.

சமாதானமும் சகவாழ்வும்

திருகோணமலையிலிருந்து கந்தளாயிலூடாக மட்டக்களப்புக்கு செல்லும் வழியில் காணப்படும் சேருநுவர பிரதேசத்தில் உள்ள ஒரு ஹோட்டலின் உரிமையாளரும் பணியாளர்களும் மிக ஒற்றுமையாக பணிபுரிந்து கொண்டிருந்தனர். தமிழ், சிங்களம், முஸ்லிம்கள் என பாகுபாடுஎறி அங்கு அவர்கள் பணி புரிந்து வருவதைக் காணும்போது மகிழ்ச்சியாக இருந்தது.

இருள் சூழ்ந்த ஒரு மாலைப்பொழுதாக இருந்தமையாலும் மிச்சாரம் இல்லாமையினாலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாத நிலை. குரல்கள் மட்டுமே ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தது. அந்த இருளுக்குக்கூட தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு தெரியவில்லை. இந்த நகரின் அலில்லாவ சந்தியினூடாக வலது பக்கம் சென்றால் வெலுகல், வாகரையினூடாக மட்டக்களப்புக்குச் செல்ல முடியும். அந்த சந்திக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்த ஹோட்டலிலேயே வியாபாரம் சூடு பிடித்துக்கொண்டிருந்தது.

அந்த ஹோட்டலின் சொந்தக்காரர் ஜயதிஸ்ஸ, உணவருந்த வருபவர்களைக் கவனிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். அவர் தனது வியாபாரம் குறித்துக் கூறுகையில், 'எனது வியாபாரஸ்தலத்தை நூறு வீதம் துப்புறவாக வைத்துக்கொள்வேன். அதேபோல் எனது கடைக்கு வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரையும் ஒரேவிதமாகவே எந்தவித பாகுபாடும் இன்றி கவனிப்பேன். ஒரேமதிரியாக கதைப்பேன். பொதுமக்கள், பாதுகாப்புப் படையில் ஈடுபடுவர்கள் என்ற பாகுபாடு என்னிடம் இல்லை. தேநீரை எவராவது கேட்டால் கோப்பையை நன்றாக கழுவி தட்டில் வைத்து கத்தமாக வழங்குவேன். எனது வியாபாரம் இந்தளவுக்கு முன்னேற இதுவே காரணம். இந்த இடத்தில் வியாபாரம் ஆரம்பித்து 5 மாதங்களே ஆகின்றது. இதற்கு முன்னர் அந்த சந்தைக்கு அருகாமையில் கடை வைத்திருந்தேன். அவ்விடத்திலும் எனது வியாபாரம் சிறப்பாக நடைபெற்றது' என்றார்.

'தெற்கிலுள்ள மக்களுக்கு நான் சொல்லவுள்ளது என்னவென்றால் யுத்தத்தை எந்த பக்கம் நிறுத்துவது? யார் நிறுத்துவது? யாருக்கு உதவி வழங்குவது? என்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். அதனை என்னால் கூறமுடியாது. அந்தளவுக்கு அறிவோ, அனுபவமோ என்னிடம் இல்லை. அனைவரும் ஒன்றாக வாழமுடியும்' என தெற்கில் வாழும் மக்களுக்கு ஜயதில்ஸ தெரிவித்தார்.

தொழிலுக்கு உதவியாக இருக்கும் ஜயதில்ஸவின் மனைவி சுராங்கணியின் எதிர்பார்ப்பும் சமாதானமே. அவர், முக்கியமாக யுத்தம் நிறுத்தப்பட்டால் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு இல்லை. யுத்தமில்லாமல் போவதென்பதே எமது எதிர்பார்ப்பு. அனைவரும் இருபக்கங்களுக்கும் சென்று வர முடியுமானால் அதுவே எமக்குப் போதும்,' என்கிறார்.

அங்கு பணிபுரியும் மற்றுமொருவரான சந்திரகுமார் முன்னர் பாதுகாப்பு படையில் பணிபுரிந்தவர். சமாதானம் மற்றும் சகவாழ்வு குறித்தே அவரது கனவும் காணப்படுகிறது. 'எனது ஊர் மட்டக்களப்பில் களுதாவளை. நான் இங்கு தங்கநகரிலேயே திருமணம் புரிந்துள்ளனேன். நான் ஆரம்பத்தில் சிவில் பாதுகாப்பு பிரிவில் பணிபுரிந்தேன். அப்போது நான் அலில்லவ சந்தியில் பணிபுரிந்துள்ளேன். எனது அம்மா சிங்களம், அப்பா தமிழ். நான் கூற விருப்பமுவது இந்த யுத்தம் முடிவடைந்து அதாவது யாரையும் கொல்வதைச் சொல்லவில்லை. சமாதானத்துடன் முடிவடைய வேண்டும். தமிழ், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

வசதிகள் குறைந்த பின்தங்கிய பிரதேசமாக இருந்தபோதிலும் கூட சமாதானம் குறித்தும் சகவாழ்வு குறித்தும் மிகவும் தெளிவான அறிவைக்கொண்டவர்களாக சேருநுவர மக்கள் காணப்படுகின்றனர்.

'யுத்தம் எமக்குத் தேவையில்லை, சமாதானம் வந்தால் மட்டுமே இந்த கிராமத்தில் நாம் வாழ முடியும். எமக்கு வைத்துக்கொள்வேன். அதேபோல் எனது கடைக்கு வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரையும் ஒரேவிதமாகவே எந்தவித பாகுபாடும் இன்றி கவனிப்பேன். ஒரேமதிரியாக கதைப்பேன். பொதுமக்கள், பாதுகாப்புப் படையில் ஈடுபடுவர்கள் என்ற பாகுபாடு என்னிடம் இல்லை. தேநீரை எவராவது கேட்டால் கோப்பையை நன்றாக கழுவி தட்டில் வைத்து கத்தமாக வழங்குவேன். எனது வியாபாரம் இந்தளவுக்கு முன்னேற இதுவே காரணம். இந்த இடத்தில் வியாபாரம் ஆரம்பித்து 5 மாதங்களே ஆகின்றது. இதற்கு முன்னர் அந்த சந்தைக்கு அருகாமையில் கடை வைத்திருந்தேன். அவ்விடத்திலும் எனது வியாபாரம் சிறப்பாக நடைபெற்றது' என்றார்.

'தெற்கிலுள்ள மக்களுக்கு நான் சொல்லவுள்ளது என்னவென்றால் யுத்தத்தை எந்த பக்கம் நிறுத்துவது? யார் நிறுத்துவது? யாருக்கு உதவி வழங்குவது? என்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். அதனை என்னால் கூறமுடியாது. அந்தளவுக்கு அறிவோ, அனுபவமோ என்னிடம் இல்லை.

சேருநுவர ஹோட்டலில் பணிபுரியும் சந்திரகுமார்

சேருநுவர ஹோட்டல்

வசதிகள் குறைந்த பின்தங்கிய பிரதேசமாக இருந்தபோதிலும் கூட சமாதானம் குறித்தும் சகவாழ்வு குறித்தும் மிகவும் தெளிவான அறிவைக் கொண்டவர்களாக சேருநுவர மக்கள் காணப்பட்டனர்

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரபோகிக்கப்படக்கூடிய அனைத்து சர்வதேச தியங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப்ப மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமுல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

10. **பாதுகாப்பும், பத்திரமும்:** சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிடமும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை தற்காத்து பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர்கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப் படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்துதவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட வலுவானவை ஆவனமோ அல்ல.

Embassy of the Federal Republic of Germany Colombo · JAPAN Embassy of Japan · The Netherlands Embassy · British High Commission · Embassy of Sweden · European Commission · Embassy of Switzerland · Australian Government AusAID · United Nations · NORWEGIAN EMBASSY · MoFAT Ministry of Foreign Affairs of the Republic of Korea · Canadian High Commission / Haut-commissariat du Canada · The United States Embassy

யாழ்ப்பாணம் சென்று வர...

A9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு செல்வதானால் மக்கள் நம்பியிருப்பது கடல் மார்க்கத்தையும் வான் மார்க்கத்தையும்தான். வான் பாதையில் செல்லும் யாழ் மக்களின் கனவை நிறைவேற்றுவதில் Expo Air முக்கிய பங்கை வகிக்கிறது. அந்நிறுவனத்தில் முகாமையாளராக பணிபுரியும் வசீகரன் யாழ் குறித்தும் கொழும்பிலிருந்து அங்கு செல்லும் போதும் அங்கிருந்து கொழும்புக்கு வரும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியும் விளக்கமாக கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் குறித்த தங்களுடைய கருத்து என்ன?

யாழ்ப்பாணம் தீபகற்பத்தைப் பொறுத்தவரை கோயில்கள், வாசல்தலங்கள் நிறைந்த அழகான ஒரு இடம். தெற்கிலிருந்தோ வெளிநாடுகளில் இருந்தோ வருபவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதை விரும்புகின்றார்கள். தற்போது அத்தகைய சந்தர்ப்பங்கள் குறைந்துள்ளதாகவே நான் நினைக்கின்றேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வெளி இடங்களுக்கும் வெளி இடங்களில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்திறடகும் எவ்வாறு போக்குவரத்தை மேற்கொள்ள முடியும்?

யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் கொழும்பிற்குப் போக வேண்டிய தேவை இருந்தால் அவர்களுடைய வதிவிடங்களுக்கு அருகிலுள்ள இராணுவ முகாம்களில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற வேண்டும். அதை ஒரு கிழமையிலிருந்து ஒரு மாதம் வரை எடுக்கலாம். அந்த அனுமதிப் பத்திரம் 3 மாதம் வரை செல்லுபடியாகும். அதே நேரம் வேறு இடங்களில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரலாம். அவர்கள் திருப்பி செல்கின்ற போது அவர்களுடைய வதிவிடமொலில் பதிவு அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டை போட்டோ பிரதிகளை வழங்கி அவர்கள் வந்த தினத்தன்றே திரும்பிச் செல்வதற்கான பத்திரங்கள் கையொப்பமிடப்பட்டு வழங்கப்படும். ஆனால் அவர்கள் 1 மாதத்திற்கும் அதிகமாக யாழ்ப்பாணத்தில் இருக்க விரும்பினால் அவர்களும் யாழ்ப்பாண மக்களைப் போல் இராணுவ அலுமதிப் பத்திரங்களைப் பெற்று பின்னர் தான் திரும்பிச் செல்ல முடியும்.

வெளி இடங்களிலிருந்து வருபவர்கள் போக்குவரத்து சிக்கல்களை எவ்வாறு தவிர்க்கலாம்?

கொழும்பிலிருந்தோ பிற பகுதிகளிலிருந்தோ வருபவர்களுக்கு இந்த நடைமுறை விஷயங்கள் தெரிவதில்லை. அதன் காரணமாக சில சிக்கல்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் தங்கள் பாஸ்போட்களை பாதுகாப்பு அமைச்சிடம் காண்பித்து அவர்களது அனுமதியைப் பெற்றுதான் செல்ல வேண்டும். ஆனால் அவர்கள் இலங்கை பாஸ்போட்டோ அடை யாள அட்டையோ வைத்திருந் தால் அவ்வாறான நடைமுறை தேவையில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி அவர்கள் செல்கின்றபோது, வெளி இடங்களில் வதிவதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தினால் அவர்கள் திரும்பிச் செல்ல முடியும்.

பிரயான நடைமுறை சிக்கல்களை எவ்வாறு மக்களுக்குத் தெரியப்படுத்தலாம்?

பிரயாண நடைமுறைகளில் உள்ள சிக்கல்கள் சம்மந்தமாக வெளிமாவட்டங்களில் உள்ள பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பது ஒரு சிக்கலான விடயமாகவே உள்ளது. அவை இவ்வாறான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழ் ஊடகங்கள் மட்டும் இவ்வாறான செய்திகளை வெளிப்படுத்தினால் அது குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டும் தான் சென்றடையும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை எல்லா சமூகத்தினரும் இங்கு தொழில் சம்மந்தமாகவோ வியாபாரம் சம்மந்தமாகவோ வந்து போக வேண்டிய தேவை இருக்கிறது. இந்நிலையில் இத்தகவல் எல்லா மொழிகளிலும் வெளியிடப்பட்டால் மட்டுமே எல்லா சமூகத்தினரையும் போய் சேரும்.

வசீகரன், Expo Air முகாமையாளர்

விமான சேவை மக்களுக்கு எந்தளவில் உபயோகமுள்ளதாக இருக்கிறது?

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்வது சில வேளைகளில் நடைமுறைக்கு சாத்தியமில்லாததாக இருக்கிறது. காரணம் இந்த விமான சேவையானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கிறது. அதே வேளை ஒரு சாதாரண பிரஜைக்கு அவரது வருமானத்திற்கேற்ற செலவினங்களாக விமான சேவை இல்லாத காரணத்தினால் இது கல்டமான ஒன்றாகவே இருக்கிறது. ஒரு மருந்துவ தேவைக்கு போக வேண்டியிருந்தால் 20,000 ரூபாய் செலவு செய்து போக்கக்டிய வசதி எல்லோரிடமும் இல்லை.

வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் தங்கள் பாஸ்போட்களை பாதுகாப்பு அமைச்சிடம் காண்பித்து அவர்களது அனுமதியைப் பெற்றுத்தான் செல்லவேண்டும்.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் தொற்று நோயை மையமாகக் கொண்டு அமைந்த 'பாதுகாப்பு' குறு நாடகத்தின் தொகுப்பு.

பாதுகாப்பு



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் வாராவாரம் உங்கள் கதைகள் பகுதியில் சமூகத்திற்கு தேவையான சம்பவங்களை நாடக வடிவில் தொகுத்து குறு நாடகங்களாக ஒலிபரப்பாகி வருகின்றமை நீங்கள் அறிந்த விடயமே.

பொதுவாக மக்கள் செறிந்து வாழும் இடங்களில் தொற்று நோய்கள் பரவுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருக்கிறது. தொற்று நோய்கள் பரவும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது கட்டாயமாகி உள்ள நிலையில் பாதுகாப்பு என்ற நாடகம் ஒலிபரப்பாகியமை அனை வருக்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும்.

அகதி முகாமில் வசித்து வரும் கமலத்தின் பிள்ளைக்கு திடீரென்று வயிற்றோட்டம் ஏற்படுகிறது. வைத்தியசாலைக்கு கொண்டு சென்றால் பிள்ளையின் உணவில் ஏதோ மாற்றம் ஏற்பட்டதால் தான் வயிற்றோட்டம் ஏற்பட்டதாக வைத்தியர் கூறுகிறார். கட்டாயமாக கட்டாறிய தண்ணீரையே குடிப்பதற்கு பயன்படுத்த வேண்டும் என்றும் வைத்தியர் கூறுகிறார். அகதி முகாம்கள், நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த விடயமே.

வயிற்றோட்டம், வாந்திபேதி, கொலரா, யானைக்கால் ஆகிய நோய்கள் பரவுவதற்கு அசுத்தமான நீர் தான் முக்காரணம் என வைத்தியர் தெளிவுபட கூறுகிறார். பொதுவாகவே மக்கள் அதிகமாக வாழும் இடங்களை துப்புரவாக வைத்திருப்பது கடினம். இதனால் ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அங்கு வாழும் அனைவருக்குமே இலகுவாக தொற்றி விடும். அத்தோடு இவ்வாறான இடங்களில் பெரிய தாங்கிகளில்தான் குடி நீரை நிரப்பி வைப்பார்கள். அந்த தாங்கிகள் மாதக்கணக்கில் சுத்திகரிக்கப்படாமல் இருக்குமிடத்து அந்த நீர் மூலமும் நோய்கள் பரவ வாய்ப்பு ஏற்படும். தேங்கி நிற்கும் கழிவு நீர் மூலம் நுளம்பு பெருக வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு கமலம் தங்கள் வாழ்விட்டதில் எதிர்நோக்கும் சுகாதார சீர்கேடுகள் பற்றி வைத்தியரிடம் கூறுகிறார்.

இதை விட முக்கியமானது வீதியோர கடைகளில் உணவுகளை வாங்கி உண்பதால் ஏற்படும் பிரச்சினைகள். பொதுவாக அகதி முகாம், நலன்புரி நிலையம், வைத்தியசாலை, பாடசாலை இவ்வாறான பொது இடங்களிற்கு அருகில் சிறிய பெட்டிக் கடைகளில் உணவு விற்கப்படுகிறது. இவ்வாறு விற்பனை செய்பவர்கள் தமது இலாபத்தை மட்டும் கருத்திற் கொண்டு சுகாதாமற்ற முறையில் உணவுத் தயாரிப்பில் ஈடுபடுவார்கள். விற்பனை செய்யும் போதும் பாதுகாப்பான முறையில் உணவை வைத்திருக்கமாட்டார்கள். இவ்வாறான இடங்களில் உணவுகளை வாங்கி உண்பதாலும் உடலில் நோய்கள் ஏற்படவாய்ப்பு இருக்கிறது. பெற்றோர்கள் இவ்வாறான விடயங்களில் பிள்ளைகள் மீது கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இந்த நாடகத்தில் வைத்தியர் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றியும், பாதுகாப்பு வழிகள் பற்றியும் கூறுகிறார். இவ்வாறு ஊடகங்கள் வாயிலாக தொற்று நோய்கள் தொடர்பாக வழங்கப்படும் அறிவுறுத்தல்களை ஒவ்வொரு மட்டத்தில் உள்ளவர்களும் அறிந்து கொள்ள வேண்டும், அவை உங்கள் வாழ்க்கையை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான கருவிகளாக அமையும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS · USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிறீலங்கா) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.